விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 18 ஜுல்கைதா 17 இதழ் 205
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 3-9-1985

## ஆலாலசுந்தரம் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிர்வாகச்செயலாளரும் முன்னாள்கோப்பாய் எம்.பியுமான திரு. எம். ஆலாலசுந்தரம் (50 வயது) நேற்றிரவு எட்டுமணியளவில் இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டார்.

காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைக் கடத்திச் சென்றதாக கூறப்படுகிறது.

அவர் கடத்தப்பட்டபோது சாரம் மட்டும் அணிந்திருந்தார்.

## மக்கள்வங்கிமுகாமையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடபிரதேசத்தில் உள்ள மக்கள் வங்கிக்கிளைகளில் நகைகளை அடகு வைத்தவர்களுக்கு நகைகளைத் தொடர்ந்து கொடுப்பதற்காகவும், வைப்பில் இட்ட பணத்தை மக்கள்

(5ம் பக்கம் பார்க்க)

# ஐந்து தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து சிறையில் மேலும் 4 இளைஞர் உண்ணாவிரதம்!

(கொழும்பு)
**வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேலும் நான்கு தமிழ் இளைஞர்கள் ஐந்து தினங்களுக்கு முன்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்**

ஏற்கனவே 25 தினங்களுக்கு முன்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த ஐந்து தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக சாகும்வரை உண்ணாவிரதத்தை இவர்கள் ஆரம்பித்துள்ளதாக, சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது

கடந்த மாதம் 8ம் திகதி வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம் ஆரம்பித்த 5 தமிழ் இளைஞர்களில் 3 பேர் கடந்த மாதம் 23-ம் திகதிக்கு முன்னர் மயக்கமடைந்ததைத் தொடர்ந்து அவர்கள் உண்ணாவிரதம் இருந்த இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு சிறை ஊழியரால் தூக்கிச் செல்லப்பட்டதாகவும், இவ் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது

அவர்கள் தூக்கிச் செல்லப்

5-ம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் 8 இளைஞர்கள் கைது!

(வாழைச்சேனை)
வந்தாறுமூலையில் ஒரு பகுதியை அதிரடிப் படையினர் சுற்றி வளைத்ததில் 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் நேற்றுபலத்த சோதனை இடம் பெற்றது

## ★ ஊர்வலம் தொடர்பாக பல்கலைக்கழகமாணவர் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)
வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாகப் பொது மக்களால் நடத்தப்படும் ஊர்வலங்கள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளனர்.

'ஊர்வலங்கள் யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் முடித்

(5-ம் பக்கம் பார்க்க.

## நேற்றைய திக்கம் சம்பவம்

(கரவெட்டி)
பருத்தித்துறைப் பகுதியில் திக்கம் என்னுமிடத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் பதற்ற நிலை தோன்றியுள்ளது

ஆயுதப் படையினருக்குப் பொருட்கள் ஏற்றிச்சென்ற

(5-ம் பக்கம் பார்க்க)

## நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நாளை புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் சகல வர்த்தக நிலையங்களையும் மூடி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது

யாழ் மாநகர தமிழ் பேசும் மக்கள் சார்பில், நேற்று வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

'எமது வர்த்தக நிலையங்களை புதன்கிழமை முழு நாளும் மூடி சித்திரவதைகளை கண்டிப்போமாக'

ஒரு நாளைக்கு சகல வர்த்தக நிலையங்களும், வாகனச் சொந்தக்காரர்களும் வியாபார நிலையங்களை மூடி எங்களுடைய அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அரசாங்கத்தின் இனவெறித்தனத்தை உலக அரங்கிற்கு கொண்டுவந்து அவர்கள் மூலமாக சிறையிலே புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கும் எமது சிங்கங்களை விடுதலை செய்யும்படி தூண்டுவோமாக!''

(க

## குண்டு வைத்து தகர்ப்பு!

(வவுனியா)
ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் வவுனியா மாவட்டசபை உறுப்பினர் திரு பரமநாதனின் வீடு, நேற்றுமுன்தினம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது

அப்பகுதியில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடிசைகளும் எரிக்கப்பட்டன.

(மா-அ)

## 3வது சுற்றுப்பேச்சு புதுடில்லியில்?

(கொழும்பு)
தமிழீழத் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இன்னும் இரண்டு வாரங்களில் புதுடில்லியில் நடைபெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவினால் ஒழுங்கு செய்யப்படும் இந்த மூன்றாவது சுற்றுப் பேச்சில் தமிழ் தீவிரவாதக் குழுக்களின் பலவற்றின் தலைவர்கள் பங்குகொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## யாழ். குடாநாட்டில் நடந்த மௌன 'ஊர்வலங்கள்!'

(யாழ்ப்பாணம்)
வெலிக்கடைச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக்காலை சீருடை தரித்த பாடசாலை மாணவர்கள் கறுப்புப்பட்டிகள் அணிந்து பெரும் அணி அணியாக யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மௌன ஊர்வலங்கள் நடத்தினர்

நேற்றுக்காலை தத்தம் பாடசாலைகளுக்கு சென்ற பல ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள், வகுப்புக்களை விட்டு வெளியேறி புத்தகங்களுடன் பாடசாலைகள் முன்னிலையில் ஒன்றுகூடி வரிசையாக அணிவகுத்து நின்றனர். பின்னர் ஊர்வலங்கள் ஆரம்பமாகின.

6ம் வகுப்பு மாணவர்கள் தொடக்கம் உயர் வகுப்பு மாணவர்கள் ஈறாக இவ்வூர்வலங்களில் கலந்து கொண்டனர்

மாணவர்களின் கைகளில் சுலோக அட்டைகள் ஒருபுறமும், மறுபுறம் புத்தகப் பைகளும் இருந்தன.

பாடசாலை மாணவர்களின் ஊர்வலங்கள் மானிப்பாய்

(5-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஹர்த்தால் குண்டுவெடிப்பு; பஸ் தீவைப்பு

(மட்டக்களப்பு)
அம்பாறை - திருக்கோவிலில் நடந்த வன்செயல் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை.

நண்பகல் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் நின்ற வாழைச்சேனை பஸ் ஒன்று குண்டு வெடித்து பின்பகுதி சேதமடைந்தது. பிரயாணிகளை இறக்கிவிட்ட பின்னர் பஸ் சேதப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து எட்டு மைல்களுக்கப்பாலுள்ள தேற்றாத்தீவு என்னுமிடத்தில் பிரயாணிகளை இறக்கிவிட்ட பின் பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

கொழும்பு ரயில்கள் ஓடவில்லை

(5-ம் பக்கம் பார்க்க)

## 60 தமிழ்க் குடும்பங்கள் காடுகளில் தஞ்சம்!

(வவுனியா)
செட்டிகுளம், சின்னத்தம்பனையில் ஊர்காவற் படையினால் சுமார் 60 தமிழ்க்குடும்பங்கள் பயமுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அக்குடும்பங்கள் காடுகளில் தஞ்சமடைந்துள்ளன.

க. அழகர் (34 வயது) மற்றும் 31 வயதான ஒரு பெண்ணும் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து, யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(மா-அ)

## கட்டுடைச்சந்தை

(யாழ்ப்பாணம்)

கட்டுடைச்சந்தை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. அண்மைகாலங்களில் மேற்படி சந்தையின் கூரைத்தரைங்கள், திராந்திகள் திருடப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பின்மையால் இயங்கமுடியாத நிலையிலிருந்தது.

அவ்வூர் பொதுமக்களும், நலன்விரும்பிகளும் சந்தையின் அவசியத்தை உணர்ந்தெடுத்த முயற்சியின் பலனாக மீள புதுபிக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. மரக்கறி, மீன் வியாபாரம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ச)


## தேவை

### மின்தறி நெசவாளர்கள் (பெண்கள்)

ஆகக் குறைந்தது 02 வரு - அனுபவமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதி உண்டு.

உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 325,
C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம். 325

## முக்கிய அறிவித்தல்

சவுதி அரேபியா, மலேசியா ஆகிய இடங்களில் கூடிய வருமானம் உடைய தொழில் பெற்றுச்செல்லும் உடனடிப் பயண ஒழுங்குகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் நேரில் வாருங்கள்.
5-9-85 க்கு முன்னதாக தொடர்பு கொள்ளுங்கள்.

ஷாஹி ஷிபாஸ் ஏஜென்சிஸ்
125, கட்டிக்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.
[பழைய பொலிஸ் நிலையம் அருகாமையில்] 329

108, BROWN ROAD, JAFFNA.

## A/L87 பொது இரசாயனம்

சத்தீஸ்

ஆரம்பம்: 4-9-85 புதன் 6-15 a. m.
(திங்கள், புதன் 6-15 a. m., சனி, ஞாயிறு 4 45 p. m.)
புதிய பிரிவு ஆரம்பம் 6-9-85 வெள்ளி 4-45q.m.

## A/L 86 புதிய பிரிவு

ஆரம்பம்: 7-9-85 சனி 3 p m.
சனி, ஞாயிறு 2-15, 4-15 p. m.
முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
வேறு பிரிவுகளும் ஆரம்பிக்கப்படும்.
(310)


## உருக்கமான வேண்டுகோள்

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் தேகிகநாதன் என்பவர் புதன்கிழமை அன்று (28-8-85) காரில் உடுப்பிட்டியில் இருந்து வந்துகொண்டிருக்கும் போது அவரின் வாகனத்தைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்த வாகனத்தில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிமுனையில் கடத்திச்சென்றுள்ளார்கள். அவரைக் கடத்திச் சென்றவர்கள் தயவுசெய்து உடனடியாக விடுதலை செய்யுமாறு மனைவி, பிள்ளை, தாய், சகோதரர்கள், மல்லாகம், கோட்டைக்காடு, மயிலங்காடு, ஏழாலை, சூராவத்தை, மயிலணி வாழ் மக்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். 525

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி

### மாரிமுத்து இராசரத்தினம்

தோற்றம்:

08-05-1904

மறைவு:

07-09-1982



அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மகன், மருமகள்,
சகோதரர், சகோதரிகள்.
63, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (513)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் அருள்மிகு மருதடி விநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ச)

## விடுவிக்க கோரிக்கை

(கல்வியங்காடு)

''எனது கணவரை என்னிடம் ஒப்படையுங்கள்'' என்று ஆகஸ்ட் 21 ம் தேதி இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட முன்னாள் காங்கேசன்துறை சிமெந்து ஆலை ஆளணி முகாமையாளரான திரு கி. ஈ. குணரத்தினத்தின் மனைவி திருமதி கு. திரேசம்மா பணிவான வேண்டுகோளை விடுக்கிறார்.

''தந்தையின் நினைவால் எட்டுப் பிள்ளைகளின் சோகத்தை என்னால் தாங்கமுடியவில்லை எனது கணவர் இரத்தழுத்தம் நீரிழிவு நோய்களையுடையவர். வயோதபர். இன்று உரிமைகள் மறுக்கப்பட்ட இனத்தின் சுபிட்சத்துக்கு நீங்கள் போராடுவது போலவே எனது கணவரும் தமிழினத்தின் சாபக்கேடான சமூக ஏற்றத்தாழ்வு நீங்க கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு ஸ்தாபனங்களோடு இணைந்து போராடி தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணியும் பங்களிப்பும் நீங்கள் அறியாததொன்றல்ல.

''ஒரு கிழமைக்குள் விடுவதாகக் கூறிக் கூட்டிச்சென்றீர்கள். ஆனால் காலம் கடந்தும் விடவில்லை தயவுசெய்து அவரை விடுதலை செய்யுங்கள்'' என்று திருமதி குணரத்தினம் கோரியுள்ளார்.

## நவ நாடகங்கள்: விமர்சன அரங்கு

(யாழ்ப்பாணம்)

'கலை' வாழ்வுடன் பின்னிப் பிணைந்து இருந்த காலம்போய் இன்று கலை கலைக்காகவே என்ற நிலை வந்துவிட்டது. சிற்பம், ஓவியம், கவிதை, கதை எனும் இலக்கிய வடிவங்கள் முன்பு வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்திருந்தன. வலைவீசும் போது பாடிய பாடல், நீர் ஏற்றம் இறைக்கும்போது பாடிய பாடல் இன்று மேடையிலே நாடகமாக ஆடும் பாடலாகி விட்டது. கலையம்சம்பொருந்திய பாத்திரங்கள் இன்று பாவனையில் இல்லை. அப்படிப் பட்டவை இன்று காட்சிப் பொருள்கள். இந்தவகையில் கலையை கலைக்காக வளர்க்கும் பாங்கு இன்று உள்ளது நாடகக் கலையை, மக்கள் பிரச்னைகளை எடுத்துக்கூறும் வடிவமாக மாற்றும் முறை தற்காலத்தில் வேகம்பெற்றுள்ளது. அந்த வகையில் 'மண் சுமந்த மேனியர்' மக்கள் பிரச்னைகளை முன்வைத்து வெற்றி பெறுகிறது'' என்று கலாநிதி சோ. கிருஷ்ணராசா இணுவில் கலை இலக்கிய இளைஞர் நடாத்திய விமர்சன அரங்கில் குறிப்பிட்டார்.

''பல பிரச்னைகளைத் தொட்டுக்காட்டிச் செல்லும் 'மண் சுமந்த மேனியர்' குறிப்பிட்ட ஒரு கருவை மையப்படுத்தாது எழுந்தமானமாக வளர்ந்து நாடகம் முடிவடைவது அந்த நாடகத்தின்பலவீனம்'' என்று கூறினார். மற்றொரு விமர்சகர் 'அலை' பத்திரிகை துணையாசிரியர் திரு. அ. யேசுராசா. கலாநிதி சபா. ஜெயராசாவும் 'மண்சுமந்தமேனியர்' பலர் கூடி நடிக்கும் ஒரு சிறப்பான நாடகம் என்று கூறினர்.

'கசிப்பு' எனும் சமூக சீர்திருத்த நாடகத்தை விமர்சித்த திரு. க. ஸ்ரீகணேசன், திரு. நா. சிவசிதம்பரம், திரு. செ. நடராசா ஆகியோர் தெருக்கூத்தின் சிறப்பை வலியுறுத்தினர். ஈற்றில் நாடக இயக்குனர்கள் பதிலுரைகள் கூறினார்கள்.

சங்கானை அரசினர்

# ஆஸ்பத்திரியின் அவல நிலை

(யாழ்ப்பாணம்)

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துகள் தட்டுப்பாடு பெரும் பிரச்னையாகவுள்ளது. 'பெனிசுலின்' ஊசிமருந்து கூட கடந்த பல மாதங்களாக இல்லையாம்.

நோயாளிகள் வெளிச்சந்தையில் இம்மருந்துகளைப் பெற்று ஆஸ்பத்திரிக்கு செல்லவேண்டியுள்ளது சிகிச்சைக்கென வரும்நோயாளிகளுக்கு வழங்குவதற்கு மருந்துகளின்மையால் அவர்களை வெளியில் வாங்கும்படி டாக்டர்கள் கூறவேண்டியநிலையேற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பிராந்திய சுகாதார அத்தியட்சகருக்கு பல தடவை முறையீடு செய்தும் எவ்வித பலனும் இதுவரைகிடைக்கவில்லையாம்.

இவ்வாறு மேற்படி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார். பல் டாக்டர் ஒருவர் உட்பட நாலு டாக்டர்கள் அங்கு கடமையாற்றுகிறார்கள். பிரசவப்பகுதி, ஆண் நோயாளர்பகுதி, பெண் நோயாளர்பகுதியென 3 பிரிவுகளாக இயங்கிவருகிறது ஒவ்வொரு நாளும் அதிகமான நோயாளிகள் சிகிச்சைக்கென வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆஸ்பத்திரியில் மருந்துகளின்மையால் அவர்களுக்கு திருப்தியான சேவையாற்றமுடியாதிருக்கிறது பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் இப்பகுதியில் ஆஸ்பத்திரியின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளமை குறித்து தாம் கவலையடைவதாக அவர் மேலும் கூறினார். (ச)

## 'தமிழ்மக்களின் அரும்பெரும் சொத்து பனையாகும்!'

(கிளிநொச்சி)

இன்றைய யுவதிகளும் வாலிபர்களும் படித்துவிட்டு உத்தியோகம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதைவிட்டு சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட முன்வரவேண்டும். இதன் மூலம் சுபீட்சமான எதிர் காலத்தை அடைய முடியும்.

இவ்வாறு, உமையாள்புரம் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பனம் பொருள் அபிவிருத்திக் கண்காட்சியில் போது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் எழுத்தாளரும் கவிஞருமான செவ்வந்தி மகாலிங்கம் குறிப்பிட்டார்.

உமையாள்புரம் மாதர் கிராமமுன்னேற்றச்சங்க நிலையத்தில் நடைபெற்ற இக்கண்காட்சியை, பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி சிறீஸ்கந்தராசா திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தை மாதர் சங்கத்தலைவி மு. கமலாதேவி ஆரம்பித்துவைத்தார். திரு. சி. அருளம்பலம் தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப கண்காட்சியில் கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம் மேலும் கூறியதாவது:

''தமிழ் மக்களுடைய அரும் பெரும் சொத்து பனையாகும். பனையில் இருந்து கிடைக்கக் கூடிய பெறுமதிகளை இந்தக் கண்காட்சியில் கண்டு நாம் பிரமிப்படைகிறோம். பூமாலையில் இருந்துபெட்டி கடகம் வரை தூக்குப்பையில் இருந்து தூண்களிலே தொங்கக்கூடிய அதாக்பொருள் சிறப்புவரை பனையில் இருந்து இழைக்க முடியும் என உமையாள்புரம் மாதர்கள் நிருபித்துள்ளது பாராட்டுக்குரியதும் பெருமைக்குரியதுமாகும்'' என்றார்.

விசேட சேவை உத்தியோகத்தர் இ. இயாகராசா சி. பொ. இரத்தினசிங்கம் பன்னவேலை ஆசிரியை திருமதி எஸ். சுந்தரப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## சமய அறிவுப் போட்டி

(கல்வியங்காடு)

அரியாலை சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ பார்வதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சைவசமய அறிவுப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்: 1ம் இடம்: செல்வி த. உமாவதி, 2ம் இடம் செல்வி சி. தேவமனோகரி, 3ம் இடம் செல்வன் த. சிவராதன். இவர்களுக்கு வெள்ளிக் குத்துவிளக்குச் சோடிகள் பரிசுகளாக வழங்கப்பட்டன.

## கொக்குவில் பிரஜைகள் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் புதிய நிர்வாக சபை தேர்தலுக்கான பிரதிநிதிகள் கூட்டத்தை ரத்துச் செய்யுமாறு கூட்டுறவு உதவி ஆணையாளரைக் கோருவதென்று கொக்குவில் கிழக்கு பிரஜைகள் குழு தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்திற்கு அமைய குழுவினர் உதவி, கூட்டுறவு ஆணையாளரைச் சந்தித்து! இக்கூட்டத்தை ரத்து செய்யுமாறும் நிர்வாகத்தை கூட்டுறவு இலாகா பொறுப்பேற்க வேண்டுமென்றும் கோரியதாக பிரஜைகள் குழு தலைவர் திரு. க. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

உதவிக்கூட்டுறவு ஆணையாளர் உத்தியோகத்தர் பற்றாக்குறை இருப்பதால் பொறுப்பேற்பது கஷ்டம் எனக்கூறி, கூட்டத்தை ஒத்திவைக்க முன்வந்ததாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ஞானசம்பந்தர் ஆதீன ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஆண்டு விழா இம்மாதம் 5ம் திகதி வியாழக்கிழமை, நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீ சொக்கநாதர், ஷண்முகர், ஞானசம்பந்தர் விசேஷ அபிஷேகமும் 5 30 மணிக்கு ஞானப்பால் உற்சவமும் 6 மணிக்கு திரு வீதி பஜனையும் 8 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், 10 மணிக்கு சொலுக்காட்சி கௌரவித்தலும் 11 30 மணிக்கு பண்டாணப் பிரவேசமும் 12 மணிக்கு மகேஹஸ்வரபூசையும் நடைபெறும் பிற்பகல் 3 மணிக்குதிருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தப்புராண ப்படிப்பும் 5 30 மணிக்கு இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

# இனப்பிரச்னை விரைவில் தீரும்: ராஜீவ் நம்பிக்கை

(புதுடில்லி)

இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக விரைவில் ஒரு நல்ல தீர்வு ஏற்படும் என்று பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மீண்டும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே பிரதமர் ராஜீவ் காந்தி மேற்படி கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் பிரதிநிதிகளை நான் விரைவில் சந்திக்கவிருக்கிறேன் என்று தெரிவித்துள்ள திரு. ராஜீவ் காந்தி இலங்கையில், இராணுவத்தினர் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகவேண்டியது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

## வடமராட்சியில் 6 இடங்களில் ஞாயிறன்று உண்ணாவிரதம் நடந்தது

(புலோலி)

சிறையில் வாடும் இளைஞர்களின் விடுதலையை வற்புறுத்தியும் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கவும் கோரி வடமராட்சிப் பகுதியில் பெருந்திரளான பொதுமக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆறு இடங்களில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

புலோலி மந்திகை அம்பாள் ஆலய முன்றலிலும், பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும், பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முதலி அம்பாள் ஆலய முன்றலிலும், கரவெட்டி கலைவாணி சனசமூக நிலையத்திலும், கரணவாய் கருப்பையடி அம்பாள் ஆலய முன்றலிலும், நெல்லியடி முருகன் ஆலயத்திலும் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள், சிறுவர்கள், முதியோர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இறுதியாக உண்ணாவிரதிகள் சுலோகங்கள் தாங்கியவண்ணம் ஊர்வலமாகச் சென்றனர். இறுதியாகப் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. பொதுக்கூட்டத்தில் பலர் உரையாற்றினார்கள்.

# தீவிரவாத இயக்கத் தலைவர்கள் நாளை சென்னையில் சந்திப்பு?

(சென்னை)

தமிழ் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்கள் இன்று அல்லது நாளை சென்னையில் சந்திப்பார்கள்.

தமிழகத்திலுள்ள தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் கடந்த சில தினங்களாக மந்திராலோசனை நடத்திவந்தபோதிலும் எல்லாத் தலைவர்களும் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தவில்லை.

அநேகமாக எல்லாத் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களும் இப்பொழுது சென்னையில் இருப்பதால், இன்று அல்லது நாளை சென்னையில் கூடி முக்கிய முடிவெடுப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

பிரதமர் திரு ராஜீவ் காந்தியை புதுடில்லியில் எப்பொழுது சந்திப்பது என்பது பற்றி மேற்படி கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்.

## யாழ். மாவட்டத்தில் பரவலாக உண்ணாவிரதம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் விரிவடைந்து வரும் அனுதாப உண்ணாவிரதங்களில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்வதை காணமுடிகிறது.

சிறையில் உண்ணாவிரதமிருந்து வாடும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக குடாநாடு முழுவதும் நேற்று முதல் உண்ணாவிரதங்கள் ஆரம்பமாகின.

நேற்று கொழும்புத்துறை (துண்டி) எழிலூர் சனசமூக முன்றலில் நடந்த உண்ணாவிரதத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர். பொது மக்களும் இவர்களுக்கு ஆதரவாக கலந்து இறைவழிபாட்டு பஜனைகளைச் செய்தனர். சிறுவர்களும் அதிக அளவில் காணப்பட்டனர்.

"விசாரணை செய் அல்லது விடுதலை செய்" என்ற சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மனித உரிமை மீறலைக் கண்டிக்கும் சுலோகங்களும் காணப்பட்டன. இதற்கான வசதிகளை கொழும்புத்துறை எழிலூர் சன சமூக நிலையத்தினர் செய்துதவினர்.

(7-ம் பக்கம் பார்க்க)

# சொந்த ஊருக்கு மாற்றம் கோருகின்றனர்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள ஆசிரியர்கள் தமது சொந்த ஊருக்கு இடமாற்றம் கோரி, கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இப்பகுதியில் கடமையாற்ற போதிய பாதுகாப்பில்லையென்று கூறி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடமாற்ற விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர். (பி)

## 250 தமிழ்க் குடும்பங்கள் காடுகளில் தஞ்சம்

(வவனியா)

மன்னார் வீதி மடு றோட்டுக்கு அருகாமையில் வசித்து வந்த சுமார் 250 தமிழ்க் குடும்பங்கள் காட்டுப் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுடைய வீடுகள் எரிக்கப் பட்டுள்ளதாகவும் உயிர் தப்புவதற்காக இக் குடும்பங்கள் அயல் காடுகளில் உள்ளனர் என்று வட பிராந்திய இ. தொ. கா. பொறுப்பதிகாரி திரு பி. மதுரப்பிள்ளை தெரிவித்தார்.

இவர்களை அகதிகள் முகாம்களுக்கு கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக திரு. மதுரப்பிள்ளை கூறினார்.

### உல்லாசப் பிரயாணிகள் வருகை வீழ்ச்சி

(கொழும்பு)

வன்செயல் காரணமாக, உல்லாசப் பிரயாணிகளின் வருகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

திருகோணமலை நிலாவெளிப் பகுதியிலுள்ள உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் யாவும் உல்லாசப் பிரயாணிகள் எவருமின்றி வெறிச்சோடிக்கிடக்கின்றன.

## "ஆரோக்கியமான சமுதாயத்துக்கு சிறுர் நலன் பேணவேண்டும்"

(கிளிநொச்சி)

"ஆரோக்கியமான சமுதாயம் ஒன்று உருவாகவேண்டுமானால் சிறுர்களின் நலன் பேணப்படவேண்டும். இந்த நோக்கிற்காக தாய்மார் பாடுபடவேண்டும். தாய்மார்களின் கையில் தான் குழந்தைகளின் எதிர்காலம் தங்கி உள்ளது."

இவ்வாறு உமையாள்புரத்தில் தாய், சேய் கருத்தரங்கை ஆரம்பித்துச் சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்டத் திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி சிறீஸ்கந்தராசா குறிப்பிட்டார்.

உமையாள்புரம் மாதர் சங்க நிலையத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் பொ. அருளம்பலம் தலைமை வகித்தார்.

திருமதி பவானி தொடர்ந்து பேசுகையில் "குழந்தைகளைப் பெற்றெடுத்துவளர்க்கும் தாய்மாரும் நல்ல போஷாக்குள்ளவர்களாக விளங்கவேண்டும். அத்துடன் சிறுர்களுக்கு நல்ல ஊட்டச் சத்துள்ள உணவுகளை வழங்கவேண்டும். அப்போது தான் நோயற்ற ஆரோக்கிய குழந்தைகளாக இவர்கள் மிளிரமுடியும்" என்றார். திரு. என் சுப்பிரமணியம், திரு. இ. தியாகராசா, டாக்டர் என். ஆரோகணம், திரு. எஸ். ராஜேந்திரா, திரு எஸ். கிறிஸ்தோபர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

# தொடரும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ் மாவட்டத்தில் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் நடைபெற்றுவருகிறது.

சுன்னாகம், ஏழாலை, நாவாந்துறை, பாஷையூர், திட்டி, ஓட்டுமடம், நல்லூர், காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி, கொழும்புத்துறை, அரியாலை, கொடிகாமம், கச்சாய், மந்துவில், சாவகச்சேரி சிவன் கோவில், நாவற்குழி, குரும்பசிட்டி, உடுப்புமடம், புலோலி ஞானசம்பந்தர் கலாமன்றம், புனித அந்தோனியார்கோவில், மந்திகை அம்மன் கோவில், கரவெட்டி கரணவாய் அம்மன் கோவில் மூளாய் பித்தி விநாயகர் கோவில உட்பட 21 இடங்களில் உண்ணாவிரதம் நடைபெற்றது!

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில், ஒவ்வொரு கட்டமாக தொடர்ச்சியாக தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் நடைபெற்று வருகிறது. கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை அரியாலையிலிருந்து புறப்பட்ட ஊர்வலம், யாழ். பல்கலைக்கழகத்திற்கு சென்று ஆதரவு தெரிவித்தது.

புலோலி ஞானசம்பந்தர் கலாமன்றத்தில் உண்ணாவிரதம் இருந்தவர்கள் இறுதியில், அம்மன் கோவிலுக்கு ஊர்வலமாக சென்றனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இந்த உண்ணாவிரதங்களுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்

யாழ்ப்பாணத்தில் பலஇடங்களில் உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. (க-மா)

# ● ஒன்றன் பின் ஒன்றாக யாழ்.நகரில் செயலிழக்கும் அரச அலுவலகங்கள்

(கா யோகநாதன்)

வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அரசாங்க அலுவலகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக செயலிழந்து ஸ்தம்பித்துவருகின்றன!

தபால் வான்கள் கொள்ளையடிக்கப்பட்டதை தொடர்ந்து தபால்சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது.

டீசல் கொள்ளையைத் தொடர்ந்து கடந்த 3 தினங்களாக இ. போ. சபை பஸ் சேவை யாழ்ப்பாணத்தில் ஸ்தம்பித்துள்ளது

யாழ், திறந்தவெளி சிறைச்சாலை, தாக்கப்பட்டு, பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதைத்தொடர்ந்து அச் சிறைச்சாலையும் செயலிழந்தது.

யாழ் நீதிமன்றத்தில் அடுத்தடுத்து கொள்ளைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து நீதிமன்ற விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாக அடகு வைத்தோர் மறியல் நடத்தி வருவதால், மக்கள் வங்கி, பல வாரங்களாக ஸ்தம்பித்துள்ளது!

'யாழ் தேவி' 1983ல் எரிக்கப்பட்டதைத்தொடர்ந்து பல தடவைகள் நிறுத்தப்பட்ட கொழும்பு ரயில்சேவை, கடந்த சில தினங்களாக ஸ்தம்பித்துள்ளது!

யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் வராததினால், மினிபஸ்கள் உட்பட தனியார் வாகனச் சேவைகள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் விற்பனை நிலையங்களும் செயலிழந்தன.

யாழ் மாநகரசபை வாகனங்கள் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து வாளிமலகூடச் சேவை கடந்த பல மாதங்களாக ஸ்தம்பித்துள்ளது. குப்பை ஏற்றும் ட்ராக்டர்கள் கடத்தப்பட்டதைதொடர்ந்து சில பகுதிகளில், சுகாதார சேவை ஸ்தம்பித்துள்ளது!

யாழ் பொலிஸ் நிலையத்திற்கு வெளியில் பொலிஸ் சேவை நடைபெறுவதினால், போக்குவரத்துப்பிரிவுச்சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. கடந்த ஒரு வருடத்திற்கு பின் யாழ் நீதிமன்றத்தில் இரு வழக்குகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு வழக்கு தொடர்பான சம்பவம் பண்ணை பொலிஸ் விடுதிக்குள்ளும், மற்றது யாழ். ஆஸ்பத்திரிக்குள்ளும் நடந்ததாக கூறப்படுகிறது.

ஊரடங்குச்சட்டம் காரணமாகவும், அதைத் தொடர்ந்து தெருவுக்குதெரு மினிசினிமா ஆரம்பிக்கப்பட்டதனாலும், யாழ் நகரில் சினிமா தியேட்டர்கள் யாவும் ஸ்தம்பித்துள்ளன

தனியார் அடகுகடைகளில், கொள்ளைகள் நடந்ததைத் தொடர்ந்து பல அடகு கடைகளில், அடகு வைப்பதும் நிறுத்தப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

''வாயை அடக்கி, நாவை மடக்கிப் பணிவோடு பழகுபவர்களுக்குத் தீது ஏற்படவே ஏற்படாது.

—சலமன்

# நமது நோக்கு

## காப்பது (உண்ணு) விரதம்

தமிழ்மக்களுக்கு இது மிகப்பெருஞ்சோதனை காலம்.

இக்காலத்தில் நாம் ஒரு பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு உச்சி நின்று உள்ளங்கால் வரைக்கும் செறிந்திருப்பது சகஜம்.

பழைய கதைகளை வைத்துக்கொண்டு வேற்றுமைகளைக் கற்பித்து வீண்காலம் போக்குகிறோம்! என்ன அறிவீனம் என்று வேதனைப் படாதவர் எம்மில் யாருமுண்டோ?

பழமை பேசுவதில் அர்த்தமில்லை; ஆனால் நாம் ஒரு பழைய சமுதாயமென்ற உண்மையை நிராகரித்து வந்தேறு குடிகள் போல எம்மை வழிநடத்தும் எந்த ஆட்சிக்கும் அஞ்சோம் என்ற வீரம் இக்கால கட்டத்தில் வெளிப்படையாவது அத்தியாவசியம்.

நாம் ஒரு இனத்தவர் என்று சொல்லும்போது குலமோ கோத்திரமோ குடும்பமோவென்பது அல்ல. ஆங்கிலத்தில் 'கம்யூனிட்டி' என்று கொள்வதே இதற்கு மிகப் பொருத்தமாகும்.

எந்தச் சமுதாயத்துக்கும் சிறந்த பெருமை அளிப்பது அதற்குத் தயங்காமல் சேவை செய்வது. நான் பிறந்த சமுதாயத்தை உயரச் செய்வேன் என்று ஒருவன் உறுதிசெய்து கொண்டு அதற்கு ஏற்ற பணிகளில், தியாகங்களில் முயல்வானுயின், தெய்வமே தன் ஆடையை இறுகஉடுத்திக்கொண்டு அவனுடைய நலனைக் கவனிக்கும் என்கிறார் தெய்வப்புலவர்.

எங்கள் தனிப்பட்ட ஆன்மிக வளர்ச்சிக்கும், எங்கள் சமுதாயத்தின் ஒன்றுபட்ட ஆன்மிகப்பலத்துக்கும் நாம் தவம் செய்வது எங்கள் பண்டைய பண்பு.

காட்டில் வாழும் துறவிகள்தான் தவஞ்செய்கிறார்கள்; வேறெவரும் தவஞ்செய்யத் தகைமையற்றவர்கள் என நினைப்பது தவறு.

காப்பது விரதம் என்பது மூதாட்டியின் முதுமொழி. மனிதராய்ப் பிறந்த எவருக்கும் இடப்பட்ட கட்டளை இது.

உணவு இன்றி விரதம் காப்பது கடினம் அத்தகைய செயல் தவச்செயல் என்று போற்றத்தக்கது.

தவம் என்று சொல்வதும் இன்றைய குழப்ப நிலையில் கேலிக்கிடமாகிறது.

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணத்தில் தேங்கிக் கிடக்கும் தபால்கள், கிளிநொச்சிக்கப்பாலிருந்து வரவிருக்கும் தபால்கள் பைகளில் 'தவம்' கிடக்கின்றன. அவைக்கு உணவு அவசியமில்லாததால் அபாயம் எதுவுமில்லை.

நாம் இங்கு குறிப்பிடும் உண்ணுவிரதம் காட்டுத் தீ போல யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்குகளுக்குப் பரவியிருக்கிறது; இது ஒரு அரசியல் வேடிக்கையாகவோ, சந்தர்ப்பவாதிகளின் சடங்காகவோ இருக்கப்படாது.

நாம் நேற்றுக் குறிப்பிட்ட 'ஜனசக்தி' இவ்வித விரதத்தினுல் பலம்பெறும். உள்ளத்திலிருந்தெழும் பிரார்த்தனையைப்போல மலைகளை அசைக்கும். நினைத்த காரியம் இறைவனின் அதிகாரத்தால் கைகூடும்.

'ஒரு மனிதன்' — சாகும் வரை உண்ணுவிரதம் என்ற பிரகடனம் வெளியானதும், விடுமுறையில் உள்ள பிரிட்டிஷ் அமைச்சர் குழு நம்பர் 10 டவுனிங் தெருவுக்கு விரைந்தது. மரணபயத்தை நாடிக் கொண்டிருந்த மகாத்மாவின உயிரை அமைச்சர் சபை தீர்மானம் தப்ப வைத்தது.

மகாத்மா காந்தியின் வெருட்டுக்கு பிரிட்டிஷாரைப்போல வேறெவரும் எடுபட்டிருக்கமாட்டாரென்று கருதும் கற்றவர் இன்றும் இருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கில் யாழ்ப்பாணம் முழுவதிலும் திரண்டு உருண்டு ஒவ்வொரு கேந்திர ஸ்தானத்திலும் விரதத்தில் குந்தியிருக்கும் மக்கள் அறிய வேண்டியது இதுதான்.

கட்டுப்பாடுள்ள அறநெறியிலிருந்து இம்மியும் வழுவாது புலன்களை அடக்கும் வலிமைபெற்ற மக்கள் உணவை ஒறுத்து இந்நிலை அடக்கி சும்மாவிருக்கும் வல்லமைபெற வேண்டும். அது முடியுமானுல் வெலிக்கடையில் 18 மாதங்களாக கருவாடு போல கருகி இருக்கும் இளைஞர்களும், அவர்களுக்காக உண்ணுவிரதமிருக்கும் அனைவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கொடுமைகளை உடனடியாக நீக்கமுடியும்.

அறவழியினின்று தப்பிச் செல்லாது, தன்னுல் இயன்ற அளவுக்கு இந்த சமூக உணர்வை அதிகரிக்க, ஒவ்வொரு குடிமகனும் முன்வருவானுனுல் எந்தக் கொடுங்கோலும் வளைந்து கொடுக்கும்.

## இன்று தீர்த்தம்

அருள்மிகு மீனுட்சிஅம்பாள் மங்களம் அருளுகின்ற மதுரைக்கு அரசியாகிய மீனுட்சி அம்மைக்கு ஊரெழு கிராமத்தில் 1922 ம் ஆண்டில் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகரான சிவஸ்ரீ. அ. சு. துரைச்சாமி ஐயர் நீண்டகாலம் ஆலயத்தின் பூசகராகவிருந்து, அதன் சிறப்பான வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தார். ஸ்தாபகரின் மறைவுக்குப் பின்னர் சிவஸ்ரீ. மு. கிருஷ்ணசாமிக் குருக்கள் பலதிருப்பணி வேலைகளைச் செய்வித்து வந்தார்.

அருள்மிகு மீனுட்சிஅம்பாள் மீது அளவு கடந்த பக்தி கொண்ட சைவபெருமகன் ஒருவர், தனது சொந்தச் செலவில் புனருத்தாரண வேலைகளைச் செய்வித்து மிகவும் பெரிய அளவிலான ஆலயமாக கொடுத்ததனுல் 1979 ம் ஆண்டு புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1980 ல் மற்றுமொரு சைவ அன்பர் தனது சொந்தச் செலவில் புதிய சித்திரத்தேரொன்றை அமைத்து மீனுட்சி அம்பாளுக்கு தனது காணிக்கையாகக் கொடுத்துள்ளார். இம்மாதம் ஆகஸ்ட் 19ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இவ்வருட மகோற்சவம் எதிர்வரும் 5 ம்திகதி நடைபெறவிருக்கும் பூங்காவனத்துடன் நிறைவுபெறுகிறது.

—அ கனகசூரியர்

# சுவிஸிலுள்ள தமிழ் அகதிகள் நீதி அமைச்சர் புதிய தகவல்

(ஜெனிவா)

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும் பகுதியினர் கூடிய விரைவில் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுவிற்சர்லாந்து நீதித்துறை அமைச்சர் திருமதி எலிஸபெத் நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் ''பிளி'' என்ற வாராந்த சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றின் போதே இவ்வாறு கூறியதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் நிலவி வந்த குழப்பநிலை தற்போது ஓரளவு குறைந்துள்ளதாகவும்; இதனைத் தொடர்ந்தே இவர்கள் திருப்பி அனுப்பிவைக்கப் படவுள்ளனர் என்று திருமதி. எலிஸபெத் அப்பேட்டியில் தெரிவித்துள்ளாரம். (ரா)

# வளர்ந்த மனிதர்களை பிள்ளைகளாக்க கற்பனை செய்து பாடுவது கஷ்டம்

### பாரதி பிள்ளைத்தமிழ் நூலுக்கு பாராட்டு

(கல்வியங்காடு)

''பாரதி எளிய தமிழில் பாடியவன் அவனுக்குப் பழைய இலக்கணத் தமிழில் பிரபந்தம் பாடலாமா? என்று கேட்கலாம். பாரதி புதுமைக்குப் புதுமையாகவும் பழமைக்குப் பழமையாகவும் பாடினுன் வாழ்த்தான் ஆரிய சமாஜ செல்வாக்கு மரபு பாரதியிடம் காணப்பட்டது'' என பாரதிபிள்ளைத்தமிழ் பிரபந்த நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய போது திரு. க. சொக்கலிங்கம் குறிப்பிட்டார்.

யாழ் திருமறைப்பணி நிலையத்தில் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

புலவர் க. த. ஞானப்பிரகாசம் எழுதிய இந்நூலுக்கு ஆய்வுரை நிகழ்த்துகையில் திரு சொக்கன் தொடர்ந்து கூறியதாவது:

''புதுமை செய்ய வேண்டும் என்ற பாரதி பழமையுள் புகுந்து புதுமை செய்தான். மனிதர்கள் பெரியவர்களானதைப் பார்த்துப் பின் அவர்களைக் குழந்தைகளாக கற்பனை செய்து பாடுவதென்பது கஷ்டமே. கண்ணன், முருகன் குழந்தைகளாகவே எமக்கு காட்சி தருகின்றனர் அவர்கள்மேல் பிள்ளைப்பிரபந்தம் பாடுவது சுலபம் மனிதரைப் பாடும்போது வரையறை ஒன்று ஏற்பட்டு சுவை குன்றும் நிலை பிள்ளைப்பிரபந்தத்தில் ஏற்பட வாய்ப்புண்டு.

''வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழ் பிரபந்தம் பாடியபோது எல்லா கடவுளர்களையும் முறைப்படி வணங்கி பாடல் யாத்ததுபோல எல்லாசமயங்களிலும் உண்மைகளைக் கண்டறிந்த பாரதியை சைவமதத்தினரல்லாத புலவர் ஞானப்பிரகாசர் பிள்ளையாகக்கண்டு, எல்லாசமய தெய்வங்களையும் வணங்கிப்பாடியுள்ளமை உண்மையில் போற்றப்பட வேண்டியதே என்றார்

கலாநிதி இ பாலசுந்தரம் (யாழ் பல்கலைக்கழகம்) தமது ஆய்வுரையில்; ஒரு நூற்றுண்டுக்குப் பின்னரே பாரதிக்குப் பிள்ளைத் தமிழ் பிரபந்தம் பாடப்படுகிறது. பிரபந்தம் இறைத்தன்மை கொண்டவை தமிழில் 96 பிரபந்தம் உண்டென்பர்.

காந்தி, ஆறுமுகநாவலர், பாரதி, மூவரே மனிதருள் பிள்ளைப் பிரபந்தம் பாடப்பட்டவர்கள்

பழந்தமிழ் இலக்கியம், பாரதி இலக்கியம் இரண்டும் கலந்து இப் பிரபந்தத்தை எழுதிய புலவர் ஞானப்பிரகாசர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையிடமும், சுவாமி விபுலானந்தரிடமும் தமிழ் கற்றவர் என்பதைபாரதி பிள்ளைத் தமிழ் தெட்டத் தெளிவாகியுள்ளது.

விடுதலைக்கவிஞனைப் பிள்ளைத் தமிழில் பாடிய நூலாசிரியர் தம்மையும் விடுதலை விரும்பியாகக் காட்டியுள்ளார். பத்துப் பருவங்களடங்கிய பிள்ளைப்பிரபந்தத்தில் அம்புலிப்பருவம் பாடுவது எல்லார்க்கும் கைவரக்கூடியதல்ல ஞானப்பிரகாசர் இதில் வல்லவர் என்றார்

கொழும்பு தமிழ்ச்சங்கம் பாரதி நூற்றுண்டை முன்னிட்டு நடாத்திய பிள்ளைப் பிரபந்தப் போட்டியில் முதல் பரிசு பெற்ற பாரதி பிள்ளைத் தமிழ் வெளியீட்டு விழாவில் பிரதம கல்வி அதிகாரி திரு. இரா சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பண்டிதர்திரு. அ பஞ்சாட்சரம், திரு. க இராசேந்திரம், திரு சோ பரமசாமி ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழா வைத்தொடக்கி வைத்தனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

## இலங்கை - இந்திய கிரிக்கெட்

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும் இந்திய கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெறுகின்ற கிரிக்கெட் முதலாவது டெஸ்ற் போட்டியின் 3-வது நாள் பகல் இரண்டு மணிக்குப் பின்னர் இந்திய பந்து வீச்சாளராகிய மகிந்தசிங், ரவிசாஸ்திரி வீச்சின் போதும் அர்ச்சுணு ரணதுங்க, அரவிந்த டி சில்வா அவர்களுக்குமிடையில் 7 சந்தர்ப்பங்களில் இலங்கை அணி வீரர்கள் விக்கட்டுகளை கால்களால் மறித்து விளையாடினர். இந்திய அணி வீரர்கள் எல். பி டபிள்யு. விண்ணப்பித்த போதும் மத்தியஸ்தர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இச்சந்தர்ப்பத்தை 5 முறை மட்டும் தொலைக்காட்சியில் மீண்டும் மெதுவானமுறையில் சுட்டிக்காட்டியும் அதையும்கூட மத்தியஸ்தர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையிலேயே இரு அணிகளும் திறமையாக ஆடினுர்கள். ஆயினும் மத்தியஸ்தர்கள் இலங்கை அணிக்கே ஆதரவைக் காட்டினுர்கள். இது மிகவும் வருந்தத்திற்குரிய செயலாகும்.

இவ்விடயத்தை கிரிக்கெட் ஆடும் நாடுகள் தொலைக்காட்சிப்பதிவுகளை எடுத்துப் பார்த்தால் நன்கு விளங்கும். 'ஈழநாடு' தினசரிப்பத்திரிகையில் வெளியான 'இலங்கை பற்றி கவஸ்கரின் விமர்சனம்'' என்ற பகுதியில் இருக்கும் செய்தியில் எவ்வளவு உண்மையுள்ளதென அறியக்கூடியதாக உள்ளது. நானும் ஒரு கிரிக்கெட் வீரன் என்ற முறையில் இதை எழுத வேண்டியவனுக உள்ளேன் ஆனுல் இந்தியக் கோஷ்டியினர் ''பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும்'' என்ற வாக்கை நன்கு அறிந்து இன்முகத்துடனேயே இலங்கை அணியினருடன் விளையாடினுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெ. ஸ்ரீரங்கநாதன்
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## பொன்னுலை வரதராஜன்

பொன்னுலை அமைந்ததுபோல் பொலிவோடு
திகழுமெங்கள்
பொன்னுலைப் பதியமர்ந்து புவிகாக்கத் தனைசந்து
என்னுளும் அருள்வழங்கும் எங்களது மாயவன்பேர்
சொன்னுலே பாவமெல்லாம் தொலைந்துவிடும்
அறிவீரோ?

— குறிஞ்சி

## அருள்புரிவாய் திருமுருகா

நல்லைப்பதி வாழ்முருகா அல்லல் தீர்த்து அருள் முருகா
எல்லையில்லாக் கருணை நிறை தில்லைச்சிவன் பாலகா...

தந்தைக்குபதேசம் செய்திட்ட கந்தவேளே
முந்தை நாளில் நாம் செய்த பாவவினை தீராயோ
நிந்தனை செய்திருந்தால் நீதியாய்ப் பிழை பொறுத்து
எந்தையே எமக்கருளிய ஏந்தலே வாராயோ.........

பழம்நீ என்பதனுல் பழனிமலை அமர்ந்தாயே
கிழமாய் வேடங் கொண்டு வள்ளிதனை மணந்தாயே
ஈழமெங்கும் அருளோச்சும் எழில்சேர் ஆறுகா
தாளிணைகள் சரணமய்யா இணையடிகள்
வணங்குகிறோம்.........

— ஜெயந்தி

## உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களுக்காகப் போராட்ட அழைப்பு 'ரெலோ' விடுத்துள்ளது

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும், தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக, தொழிற் சங்கங்கள், வெகுஜன அமைப்புக்கள், ஏனைய விடுதலை இயக்கங்களை போராடுமாறு 'புரட்சிகர ஈழ விடுதலைக் கழகம் (றெலோ) வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தவேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது:

''எம்மிடையேயுள்ள சிலர் போராட்டத்தில் ஈடுபடாமல் இருப்பது வேதனையளிக்கும் விடயமாக இருக்கின்றது. போர்நிறுத்த இடைவேளையை எதிரிகள் நன்கு பயன்படுத்தி எம் மக்களை வேட்டையாடி வருகின்றனர். அண்மையில் நடந்த தங்காலைச் சிறைப்படுகொலை, அகதிமுகாம் படுகொலை, திருகோணமலை, வவனியா, மட்டக்களப்பு போன்ற கிராமங்களில் உள்ள அப்பாவி மக்கள் படுகொலை இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

''எம் மக்களில் பலர் சிறீலங்கா வதைமுகாம்களில் கைதிகளாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாவதும், பலாத்கார வெறிக்குள்ளாக்கப்படுவதும் தொடர் கதையாகவே இருக்கின்றது. ஈழ மக்களே வெகுஜன அமைப்புக்களே, தொழிற்சங்கங்களே சகல விடுதலை அமைப்புக்களே எமது தாயகத்தின் விடுதலைக்காகவும் வெஞ்சிறையில் மரணத்தின் பிடியில் இருக்கும் மைந்தர்களின் விடியலுக்காகவும் ஓரணியில் திரண்டு போராடுவோம்.'' (மா)

## இந்த ஆசிரியர்கள் யாழ். கல்விக் கந்தோரில் கையொப்பமிடலாம்

(கல்வியங்காடு)

வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் தென்பகுதி மாவட்ட ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் யாழ்ப்பாணம் கல்விக்கந்தோரில் நேற்றுக் கூடிநின்றனர்.

பாடசாலைகள் விடுமுறை முடிந்து நேற்று பாடசாலைகள் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து திருமலை, மன்னார், வவனியா, மட்டக்களப்பு முதலான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் தென்பகுதியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், தற்போதய சூழ்நிலையாலும் தமது கடமைகளுக்குச் செல்லமுடியாதுள்ளமையால் இதுபற்றி யாழ். கல்விப்பணிப்பாளரைச் சந்திக்கவே இவ்வாறு கூடிநின்றனர்.

பிரயாணவசதிகள் சுமுகமாகும்வரை யாழ். கல்வித் திணைக்களத்தில் இவ்வாசிரியர்கள் கையொப்பமிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு இவ்வாசிரியர்கள் கையொப்பமிட்டு வருகின்றனர். இவர்கள் யாழ் அரசாங்க அதிபரையும் சந்தித்தனர்.

## "பிரச்னைகளுக்குத் தீர்வு காண இறைவனைப் பிரார்த்திப்போம்"

(கிளிநொச்சி)

''தமிழ் மக்கள் இன்று அநாதை நிலையில் இருக்கிறார்கள் இந்தச் சூழ்நிலையில் இறைவனை மனம் உருக வேண்டிக் கொள்வதன் மூலமே பிரச்சினைக்கு விடிவு ஏற்படும். இன்றைய இன்னல்கள் நீங்க ஆண்டவனின் அருட்பார்வை எமக்குக் கிடைக்க வேண்டும் இதற்காக நாம் மனமுருகிப் பிரார்த்திக்க வேண்டும்.''

இவ்வாறு கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்ற மகோற்சவ கால சமய நிகழ்ச்சியின்போது சிறப்புரை நிகழ்த்திய கிளிநொச்சி நீர்ப்பாசனப்பொறியியலாளர் திரு. த. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப வைபவத்திற்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக் குருக்கள் தலைமை வகித்தார்.

திரு. சுப்பிரமணியம்மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''இந்து மதத்தில் ஆலய வழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆண்டவனை எச்சந்தர்ப்பத்திலும் எங்கும் வணங்கலாம் என்ற நியதி இருந்தாலும் ஆலயத்தில்வந்து வழிபடும்போது புத்துணர்வும் மனச்சாந்தியும் கிட்டுகிறது, தமிழ்மக்களாகிய நாம் இன்று சிறகொடிந்த பறவை போல இருக்கின்றோம். எமக்குச்சகலவல்லமையும் கிடைக்க இறைவன் அருள்பாலிக்க வேண்டும் என்றார்.

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் பிரஸ்தாப கழகச் செயலாளர் (கோப்பாய் சிவம்) ப. சிவானந்தசர்மாவும் உரையாற்றினார்.

## வளர்ந்த....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்புரையை கலாநிதி சபா ஜெயராசா நிகழ்த்தினார் ஆசியுரையை பாதுகாவலன் ஆசிரியர் வழங்கினார்

நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சு சிவநாயகமூர்த்தி பாராட்டுரை தெரிவித்தார் நூல்அறிமுக உரையை திரு சி திருச்செல்வம் ஆற்றினார் வித்துவான் ச அடைக்கலமுத்து ஆய்வுரையாற்றினார் நூலிலிருந்து கவிதைகளை சங்கீத பூஷணம் அல்வின் தேவசகாயம பாடினார்

முதல்பிரதியை இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர் திரு வி எல் பற்றிக் பெற்றுக்கொண்டார்

## இவர்களின் பணி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தின் போது வீதித்தடைகளுக்குப் பொறுப்பாக யாழ். பரியோவான் கல்லூரி சாரண மாணவர்கள் சேவையாற்றிவருகின்றார்கள். மேலும் இவர்கள் யாழ். மாவட்ட திரிசாரணர்களுடன் இணைந்து ஆலயத்திற்கருகாமையில் முகாமிட்டு பாசறைவாசம் மொன்றையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## மிளகாய் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

செத்தல மிளகாயின் விலையில் திடீர் வீழ்ச்சியேற்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் கிலோ 70 ரூபா முதல் 80 ரூபா வரை விற்கப்பட்ட மிளகாய் தற்போது 30ரூபாவுக்கு பெறக்கூடியதாகவிருக்கிறது. (ச)

## பாடசாலை நேரம்

(கல்வியங்காடு)

யாழ். கல்வி மாவட்டப் பாடசாலைகள் நாட்டுநிலைமைகள் சரியான சிருக்கு வரும்வரை வழமைபோன்று - இன்றுள்ளபடி ஒரு நேரப் பாடசாலைகளாகவே நடக்குமென்றும், தனியார் பாடசாலைகள் இரு நேரங்களாக நடத்தமுன்வந்தால் அனுமதிக்கப்படலாமென்றும் தெரியவருகிறது.

## வெங்காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகச் சந்தையில் வெங்காயத்தின் விலை திடீரென உயர்ந்துள்ளது. அண்மையில் கிலோ ரூபா 2-50 முதல் 3 ரூபாவரை விற்பனைசெய்யப்பட்டுவந்த வெங்காயம் தற்போது கிலோ 10 ரூபாவுக்கும் பெறமுடியாதுள்ளது.

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் கொழும்புப்பகுதிகளுக்குஏற்றுமதி செய்யப்படுவதே இதற்குக் காரணமென பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## வண். வைத்திலிங்க வித்தியாலய விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

''உளவல்லமையோடு உடல் வலிமையும் பெற்று மாணவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக திகழ்வதற்கு விளையாட்டுப்போட்டிகள் சிறந்த பயிற்சிக்கழகங்களாக அமைகின்றன. மாணவர்கள் கல்வித்துறைக்களிக்கும் முக்கியத்துவம் விளையாட்டுத்துறைக்கும் அளிக்கப்படவேண்டும் விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களிடையே நல்லொழுக்கம், நற்பண்பு, சமூக மனப்பான்மை போன்றவற்றை வளர்க்கின்றன.''

இவ்வாறு யாழ். வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி கூறினார்.

நாவலடி வைரவர் கோவில் மைதானத்தில் பாடசாலை அதிபர் திரு. கே. பிறைபாணி தலைமையில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஆரம்பப்பாடசாலைகள் மாணவர்கள் வாழ்க்கையில் கல்வியின் அத்திபாரமாக அமைகிறது. அவர்களின் எதிர்காலம் ஆரம்பக்கல்வியிலேயே தங்கியுள்ளது. இப்பாடசாலை கடந்த காலங்களில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டபோதிலும் பொதுமக்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் இப்பாடசாலை வளர்ச்சியில் எடுத்த முயற்சிகளினாலும் அவர்களின் ஒத்துழைப்புக்களினாலும் இன்று பாரிய வளர்ச்சியடைந்துள்ளது. இதுபோற்றுதற்குரியதென்றும் குறிப்பிட்டார்.

திரு. இராசா விசுவநாதன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்துவைத்தார். போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை பிரதம விருந்தினர்வழங்கினார்.

போட்டியில் சம்பந்தர் இல்லம் முதலாம் இடத்தையும் ஆரூரர். அப்பர் இல்லங்கள் முறையே 2-ம், 3-ம் இடங்களையும் பெற்றன.

## திறந்த பல்கலைக்கழக மாணவர்க்கு

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பட்டப்படிப்பு, பொறியியல் டிப்ளோமா நெறிகளில் பயிலும் மாணவர்களுக்கான ஆங்கில மீள் பரீட்சை வரும் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

## இயக்குநர் சபை

(சுன்னாகம்)

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களாக ஒரே அணியைச் சேர்ந்த 7பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்கள் நாலு பேர் அளித்த வாக்குகளில் 90 வாக்குகளைப்பெற்ற திரு. சி. குமாரவேல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றும் திருவாளர்கள் பா. வைத்திலிங்கம், அ. அருட்பிரகாசம். க. சுந்தரலிங்கம். வே. செல்லையா, நா. சின்னத்துரை, செ. இலகுநாதன் ஆகியோர் இயக்குநர்களாகத் தெரிவாகினர். [மா]

## மக்கள் வங்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீளப்பெறுவதற்காகவும் மறியற்போராட்டத்தைக் கைவிடுமாறு வடபிரதேச மக்கள்வங்கி முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக பிரதேச முகாமையாளர் அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

## பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துவைக்கப்படுவதால் ஏற்படும் தாக்கத்தைவிட அரசாங்க அலுவலகங்கள் (அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்) முன்பாக முடித்துவைக்கப்பட்டு. அங்கு மகஜர் ஒன்றைக் கையளிப்பதன் மூலம் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.' (மா)

## யாழ். குடாநாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை. யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை. கோப்பாய், பருத்தித்துறை. உடுப்பிட்டி, சாவகச்சேரிஆகிய இடங்களில் இடம்பெற்றன.

மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்கள் கடும்வெயிலையும் பொருட்படுத்தாது பிரதானவீதிகளூடாகச் சென்று குறிப்பிட்ட இடங்களை அடைந்தன ஊர்வலங்களால் போக்குவரத்துக்கள் சிலமணிநேரம் ஸ்தம்பித்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊர்வலத்தில், சிறைச்சாலைகளில் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் இளைஞர்களைச் சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சிறைக்கூடங்களும் எடுத்துச்செல்லப்பட்டன. (மா)

## மறியல் தொடருகிறது

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கிகிளைகளில் அடகு வைத்தவர்கள் வங்கி செயற்படும் தினங்களில் காலை 7-30 மணிக்குமுன் மறியல் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று அடகு வைத்தோர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மட்டக்களப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றரை மணிநேரம் தாமதித்தே புறப்பட்டன ஏறுவூர் ரயில் நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்தது.

பிற்பகல் அரசாங்க காரியாலயங்களுக்கு சென்ற இளைஞர்கள் ஊழியர்களை வெளியேற்றிவிட்டனர். அதனைத் தொடர்ந்து காரியாலயங்கள் மூடப்பட்டன. தனியார் பஸ்சேவை நடைபெறவில்லை. அதிரடிப் படையினரின் உதவியுடன் குறைவான பஸ்சேவை நடைபெற்றது. (க)

## நேற்றைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லொறி ஒன்று, சங்கோட்டையிலுள்ள தேவாலய வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டதைத் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்ட ஆயுதப்படையினரும் ஹெலிகொப்டரும் அப்பகுதியில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாம்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தின்போது சிலர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (மா)

## சிறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபின்னர் மற்றும் இரு இளைஞர்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்ததாகவும், கடந்த மாதம் 23-ம் திகதிக்குப் பின்னர் அவர்களும் மயக்கமடைந்து விழுந்ததாகவும், சிறை ஊழியர்கள் அவர்களையும் அவ்விடத்திலிருந்து தூக்கி வேறு ஒரு இடத்திற்கு கொண்டுசென்றதாகவும் மேலும் தெரியவருகிறது.

முதலில் கொண்டு செல்லப்பட்ட 3 இளைஞர்களுக்கும் உண்ணாவிரதத்தை முறியடிக்கு வகையில் சிலமுயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் கடைசிவரை உறுதியாக இருந்ததாகவும், இப்படியாக இருதடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலுப் உறுதியை கடைசிவரை கைவிடவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து மேலும் நான்கு தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து மேலும் தெரியவந்துள்ளது. (க)


## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு

### திருமதி வடிவேலு மாணிக்கம் அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் நிகழும் குரோதன வருடம் ஆவணி மாதம் 19ம் திகதி (4-9-85) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் சமூகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

பாலகிருஷ்ணன் (குடும்பம்)
வ. புவனேந்திரராஜா,
வ. கனகேந்திரன்,
(மகன்மார்)
செ. புண்ணியமூர்த்தி (தம்பி)

''செல்வம்''
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

528

★ நகை அடகுவைத்தவர்கள்

# வங்கிக் கிளைகளில் தொடர்ச்சியான போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள்வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்கள் நேற்று முதல் வங்கிக் கிளைகளில் தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இப்போராட்டத்தினால் ஒய்வூதியம் பெறுவோர் கணக்கு வைத்திருப்போர் உட்பட வாடிக்கையாளர் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடகு வைத்தோர் எடுத்த முடிவைத் தொடர்ந்து நேற்றுக் காலை மறியல் ஆரம்பமானது. யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள்வங்கிக் கிளையில் ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்கள் மறியல் செய்தனர். இதனால் வங்கி ஊழியர்கள் உள்ளே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது.

யாழ். பிரதான வீதிக் கிளையிலும் பெண்கள் நேற்றுக் காலை மறியல் செய்தனர்.

கன்னாதிட்டி வங்கிக்கிளை, யாழ். நவீனமார்கட் கிளை ஆகியவற்றிலும் மற்றும் கிளைகளிலும் மறியல் நடைபெற்றது. (ஈ)

## உணவு சேமிப்புக்கு அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நெருக்கடி நிலைமையின் போது ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டை சமாளிக்க வசதியாக அரசு பெருந்தொகையான உணவுப் பொருட்களை சேமிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

இதன் ஆரம்பக்கட்டமாக அரசு, 30000 தொன் அரிசியை மேமித்துள்ளது.

மேலும் ஒன்றரை லட்சம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது. அவற்றோடு பிரிமா ஆலைக்கும் 2 லட்சம் தொன் சோளம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

## வருடாந்த உற்சவம்

(மல்லாகம்)

மல்லாகம்பழம்பதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நாளை புதன் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம்மாதம் 13-ந் திகதி தேரும் 14-ந் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (மா)

## "பாரதியின் பரம்பரையினர் ஈழத்திலும் வளர்கிறார்கள்"

### நூல் வெளியீட்டு விழாவில் கருத்து

(புங்குடுதீவு)

"பாரதிக்குப்பின்னர் அவன் பரம்பரையினர் ஈழத்திலும் தோன்றி வளர்கிறார்கள். கருத்தின் இறுக்கத்திலும் கவிதைப்பாங்கிலும் தென்னாடும் வியக்கத்தக்க வீச்சில் இவர்கள் வெளியிடும் கவிதைகள் வியக்கத்தக்கனவாய் உள்ளன".

இவ்வாறு புங்குடுதீவு அரசினர் மகாவித்தியாலயத்தில் புங்குடுதீவு கலை, இலக்கிய வட்டத்தினர் வெளியிட்ட கவிஞர் சு. வில்வரெத்தினத்தின் 'அகங்களும் முகங்களும்' நூல் வெளியீட்டுவிழாவில் விமர்சன உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் நா சுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் இவ்விழாவுக்கு தலைமை தாங்கினார் சுப்பிரமணியஐயர் தொடர்ந்து உரையாற்றுகையில்; பாரதியின் கவிதை ஆவேசம் புதுக்கவிஞர் உள்ளத்திலும் பாய்ந்து புதிய சிந்தனைகளை கிளப்பிவிடுகின்றது பெருமதியான, கனதியான உள்ளடக்கத்தால் வில்வரெத்தினத்தின் கவிதை நூல் சிறப்பான இடத்தைப் பெறுகிறது என்றார்.

நூல் வெளியீட்டுரை நிகழ்த்திய அ யேசுராசா, அலைகள் வெளியீட்டின் ஏழு படைப்புகள் பற்றியும் வெளியீட்டுத்துறையின் பணிகள் பற்றியும் விளக்கினார்.

ஆ சபாரெத்தினம் நூலை விமர்சிக்கும்போது, "புலவர் சிவானந்தன் தேனிப்பு என்ற சொல்லுக்கு சுவைத்தல் சப்புக்கொட்டல் என்ற பொருளை இங்கே கூறினார். இதுவே சரியான பொருள். தியானித்தல் என்பது சரியான கருத்தில்லை. வில்வரெத்தினம் நல்ல சிந்தனைகளோடு படிமம் குறியீடுகள் குறித்தும் அக்கறைகாட்டியுள்ளார்" என்றார் நூல் அறிமுக உரையை க. திருச்செல்வம் நிகழ்த்தினார்.

கவிஞர் உ சேரன் விமர்சிக்கும்போது, சொற்தேர்வு, சொற்சேர்க்கை முதலியவற்றில் இக் கவிதைநூல் வெற்றி பெற்றிருக்கிறது என்றார்.

சிறப்புப் பிரதிகளை திரு ச. சதாசிவம் வெளியிட்டுவைத்தார் நூலாசிரியர் சு. வில்வரெத்தினம் தமது பதிலுரையில் காலஞ்சென்ற எழுத்தாளர் மு தளையசிங்கத்தை நினைவுபடுத்தி அவருடைய அறிவுரையும் ஆற்றுப்படுத்தலுமே தன்னை ஒரு ஆக்க இலக்கிய கர்த்தாவாக மாற்றின என்றார்.

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 18 (1985 - 9 - 3)
கிழமை: செவ்வாய்
திதி: சதுர்த்தி முன்இரவு வரை
நக்ஷத்திரம்: ரேவதி மு ப. 10 - 46 ன் மேல் அச்சுவினி

மேடம்; குமுறும் நெஞ்சத்துடன் நலிகிடைத்துவிர்கள். வாழ்க்கையில் சோர்வுக்கிடமுண்டு சிறிய விஷயமும் உண்டு

இடபம்: உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள மேலிடத்து உறவு உற்சாகத்தை யளிக்கும்

மிதுனம்: போட்டிவிவகாரங்களில் ஈடுபடுவீர்கள் சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கும் அரசாங்க ஊழியராயின் ஆதரவுண்டு

கடகம்: மாதுருவழி ஆசரவுண்டு நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் புதியமுயற்சிகள் இன்று கைகூடும்.

சிங்கம்; பொதுவாக வாழ்க்கையில் நிம்மதிகிடைக்கும் வீட்டிலும் புத்திரர் மகிழ்ச்சு அடைவர் தொழிலிலும் வெற்றியுண்டு

கன்னி: முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும் உள்வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம் உஷாராக இருக்கவும்.

துலாம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும் காதல் விவகாரம் தலைதூக்கும் சிலருக்கு பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத வகையில் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். விபத்திற்கும் இடமுண்டு அவதானம் வேண்டும்

தனுசு: தந்தைவழி பெருமைதாராளமாக கிடைக்கும் நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்களின் ஆதரவும் உண்டு

மகரம்: விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும் நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும் சுபதினம்.

கும்பம்: சிலருக்குப் புதிதாகத் தொழில் கிடைக்கும் சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும் கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு

மீனம்; தொழில்விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். நண்பர்களின் சகவாசத்தால் சிக்கல்களின் மத்தியில் மாட்டிக் கொள்ள நேரிடும் நடுநிலைமை நன்று.

திருமலை
— வே. ரவீந்திரன் —

## சிங்கள அகதிமுகாமை இடமாற்றுமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா பௌத்தவிகாரையில் உள்ள சிங்கள அகதிமுகாமை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரி வவுனியா முன்னாள் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம், இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ் செல்லச்சாமிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்

"மேற்படி அகதிமுகாமினால் பலதரப்பட்ட பிரச்னைகள் ஏற்படுகின்றன. அகதிமுகாம் இவ்விடத்தில் தொடர்ந்தும் இருப்பதினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம, இதனைக் கருத்திற்கொண்டு முகாமினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கவும்" என்று டாக்டர் பரராஜசிங்கம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

★ இனப் பிரச்னை

## சமரசப் பேச்சுக்களை கைவிடக் கூடாது!

### 3 அரசியல் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

"திம்பு பேச்சுவார்த்தைகள் கைவிடப்படக்கூடாது" என்று மூன்று பிரதான அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன

யுத்தப்பிரகடனமே இனப் பிரச்னைக்கான தீர்வு என்று சிலர் கூறும் அறைகூவல்களையும் இந்த மூன்று கட்சிகளும் எதிர்த்துள்ளன.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவையே இம்மூன்று கட்சிகளுமாகும்

இம்மூன்று கட்சிகளின் செயலாளர்களான திரு. பேர்னாட் சொய்ஸா, திரு கே பி சில்வா, திரு. விஜய குமாரதுங்க ஆகியோர் கையெழுத்திட்ட ஒரு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தடைப்பட்டிருக்கும் திம்பு பேச்சுவார்த்தைகள் கைவிடப்படக்கூடாது பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாகவேண்டும் பகைமை உணர்வை விட்டு, பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து தமிழர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப அவர்களின் தலைப்பாட்டை உறுதிசெய்வதற்கும் அநீதியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் அவர்கள் சுயமரியாதையோடு வாழவும் புதிய ஆலோசனைகளோடு பேச்சுவார்த்தைக்குத் தீர்வுகாணவேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

## இலக்கியவிழாவாக மாறிய பாராட்டு விழா

கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றமையைப் பாராட்டி இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டம் எடுத்த விழா, இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊர்ப் பெரியோர்கள் கலந்துகொண்ட பெருவிழாவாகச் சிறந்தது

பிரபல எழுத்தாளர் ஆசிரியர் சொக்கன், கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி சோ கிருஷ்ணராசா, எழுத்தாளர் ஐ சாந்தன், திரு வீரமணி ஐயர், திரு சபா. ஆனந்தர், பண்டிதர் இராசையா, கலாநிதி கருணானந்தம் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு வி ஆறுமுகம், பண்டிதமணியின் நூல் வெளியீட்டுச் செயலர் திரு, பஞ்சாட்சரம், மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்

திரு. வீரமணி ஐயரின் வாழ்த்துப்பா மண்டபத்தில் இருந்தோரை ஒரு நிமிடம் வானத்தில் பறக்கவைத்தது விழாவில் எழும்பிய இலக்கிய மொழி நடையின் தெளிவு எளிமை பற்றிய சர்ச்சை விழா முடியும்வரை காத்திரமான ஒரு விவாதத்திற்கு வித்திட்டது இது விழாவை வெறும் பாராட்டு விழாவாக இல்லாமல் பெரும் இலக்கிய விழாவாக்கியது என்று சொன்னால் மிகையாகாது

இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் திரு. ச. சோதிப்பெருமாள், இளைப்பாறிய அதிபர் திரு. சபா. ஆனந்தன் ஆகியோர் கலாநிதி சபா ஜெயராசாவுக்கு மாலை அணிவித்துக் கௌரவப்படுத்தினர்.

— கந்தையா ஸ்ரீகணேசன்

## உண்ணாவிரதத்தில் 6 மாதக் குழந்தை

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச்சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து சாந்தை பொதுமக்களும் விநாயகர் சனசமூக நிலையமும் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தினார்கள்.

கடந்த 31 ம் திகதி காலை 6 மணிக்கு தொடங்கிய உண்ணாவிரதம் மாலை 6 மணிவரை அமைதியான முறையில் நடைபெற்றது. உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆண்கள் பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர் உண்ணாவிரதிகள் மத்தியில் 6 மாத குழந்தையான மேகலாவும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (மா)

## வாழ்கைப் புள்ளி

(யாழ்ப்பாணம்)

1985 ஆகஸ்ட் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 555 8 என குடிஜன மதிப்பு புள்ளி விவரத் திணைக்களம் கணிப்பிட்டுள்ளது. (ச)

## கடைகள் பூட்ட 'அனுமதி' பெறவேண்டுமாம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஹர்த்தால் நடைபெறுகின்ற வேளை கடைகள் பூட்டப்படவேண்டுமானால் இனிமேல் வர்த்தகர்கள் பொலிசாரின் அனுமதிபெற வேண்டுமாம்!

கடைகள், வர்த்தகநிலையங்களுக்குச் சென்ற பொலிசாரும் மற்றும் ஆயுதப்படையினரும் தகுந்த காரணமின்றி கடைகளைப் பூட்டக்கூடாதென்றும், அவ்வாறு பூட்டுவதானால் பொலிசில் முறைப்பாடு செய்து முன் அனுமதி பெறவேண்டும் என்றும் கூறியதுடன் கடை உரிமையாளர்களின் கையொப்பமும் வாங்கிக்கொண்டு சென்றனராம்.

## ஹாட்லிக்கு நூல்கள் அன்பளிப்பு!

(புலோலி)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில், யாழ். மாணவர் அவையினால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் நூலகத்திற்கென சேகரிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களும் யாழ் மாணவர் அவையினால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என் எஸ். சாமுவேலிடம் கையளிக்கப்பட்டது. (ஈ)

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
NEW YORK NIGHTS
(வயது வந்தோர் மட்டும்)

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
The Blue Lagoon
Adults only

மே(f)பெயர் மினி சினிமா
(கஸ்தூரியார் வீதி காளிகோவில் அருகில்)
10-30, 2-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா நடித்த
நாகம்
பாம்பினதும் நாயினதும் சாகசம் நிறைந்த படம்.

ஸ்ரான்லி மினி
5'X5' திரைவானில்
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
California Girls
அமெரிக்க பெண்களின் பொழுது போக்குகளும் சிறந்த பாடல்களும் நிறைந்த படம்
Adults only

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
FRANCO NERO in
Texas Adios
1965ல் யாழ். நீகல் திரையில் இருமாதங்களுக்கு மேல் ஓடிய Cow Boy சித்திரம்.

உஷா மினி
புதிய வெளியீடு
10-30, 2-30, 4-45, 6-45
Torso
வயது வந்தவர்களுக்கு மட்டும்
ஒவ்வொரு கொலையையும் கச்சிதமாகச் செய்யும் கொலையாளி-அடுத்த கட்டம் என்ன என்று உங்களை அங்கலாய்க்க வைக்கும்- உங்கள் இதயம் வேகமாக அடிக்கும்- இதுவரை வெளிவராத மயிர்கூச்செறியவைக்கும் திகில் படம்.

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30, p.m;
26 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்;
ரீகோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், சில்க்ஸ்மிதா, ஜெய்சங்கர் நடித்த
சாரு மகேந்திரரவின்
நீங்கள் கேட்டவை
சன்டீமன் கனி

சேதமடைந்த

# அச்சுவேலி தபால் நிலையத்திற்கு பாதுகாப்பு!

(கோப்பாய்)

அச்சுவேலி தபால் நிலையத்தின் உட்பக்கக் கதவுகள் நள்ளிரவில் இனந்தெரியாதவர்களினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன இதுபற்றி அச்சுவேலி தபால் அதிபர் பொலிசாருக்கும் தபால் திணைக்கள மேலிடத்திற்கும் புகார் செய்துள்ளார்.

நள்ளிரவில் நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்துவழமையான காவலாளியுடன் தபால் நிலையத்தின் பாதுகாப்பை முன்னிட்டு இரவு வேளையில் தபால்நிலைய ஊழியர் சிலரும் அங்கு தங்கியிருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இதனால்தபால்நிலையப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் இரவு நேரத்தில் அச்சுவேலிப் பகுதி மக்கள் தபால் நிலையத்தில் பெறக்கூடிய சேவையையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது (க)

பட்டதாரிச் சம்பளம்:

# சங்கீத ஆசிரியர்கள் அமைச்சரைச் சந்திப்பர்

(கல்வியங்காடு)

சங்கீத பூஷண ஆசிரியர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் பெறும் சம்பளத்தைக் கொடுப்பதற்குக் கல்வி அமைச்சர் இணங்கியிருந்தும் இது பற்றிய சுற்று நிருபம் இதுவரைபிராந்தியக் கல்விப்பணிப்பாளர்களுக்குக்கிடைக்காததினால் சங்கீத பூஷண ஆசிரியர்கள் குறித்த சம்பளத்தைப் பெற முடியாதிருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சம்பந்தமாகச் சங்கீத ஆசிரியர்கள் கூட்டம் அண்மையில் கூடப்பட்டு இவ்விடயம் தொடர்பாகக் கல்வி அமைச்சரைச் சந்திப்பதென முடிவு செய்யப்பட்டது.

மேலும், சங்கீத வித்துவான் சங்கீசரத்தினம், வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களுக்கும் பட்டதாரிச்சம்பளம் வழங்க வேண்டுமென அமைச்சிடம் கோரும் தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# "இலைக்கறிவகைகளை உணவில் சேர்க்க வேண்டும்"

[பண்டத்தரிப்பு]

எமது முன்னோர்கள் சத்துமிக்க உணவு வகைகளை குறிப்பாக இலைக்கறி வகைகளை தங்கள் உணவில் அதிகளவு சேர்த்துக்கொண்டதால் தான் அவர்கள் திடகாத்திரமான வர்களாகவும், நீடித்த ஆயுளைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்தார்கள். மிகவும் குறைந்த செலவில் கிடைக்கும் முருங்கை, முசுட்டை, அகத்தி போன்ற இலை வகைகளை எமது மக்கள் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.''

சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். பிரதேச சுகாதார கல்வி அதிகாரி திரு. க. வைத்தீஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கானை வடக்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு குழுத் தலைவரி சட்டத்தரணி பொ. சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் சுகாதார நிலையத்தை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். அருளம்பலம் திறந்துவைத்தார்.

சுகாதார கல்வி அதிகாரி திரு. வைத்தீஸ்வரன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குழந்தைகளுக்கு தாய்ப்பாலே மிகவும் சிறந்தது என்றும். அதில் நோய்த்தடுப்பு சக்தியும். இதர இயற்கைச் சத்துகளும் அடங்கியிருப்பதாகவும் கூறினார்:

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து வைத்திலிங்கம் உரையாற்றுகையில், ''சிறு சிறு நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்கும், தொற்று நோய்கள் பரவாது தடுப்பதற்கும் இதுபோன்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் சேவையாற்ற முடியும்'' என்றார்.

பொது சௌக்கிய தாதி சகோதரி திருமதி வை. சண்முகராசா, சங்கானை பொது சுகாதார பரிசோதகர் திரு. எஸ். ஜோன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

[க]

# சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோயில் வருடாந்த உற்சவத்தை யொட்டி யாழ். மாநகராட்சி மன்றத்தினர் நடாத்தும் சமய அறிவுப்போட்டி இம்மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இப்போட்டி நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் இன்று காலை 9 மணிமுதல் நடைபெறும்.

போட்டிமுடிகள் 15ம் திகதி வெளியிடப்படுவதோடு அன்றைய தினம் பிற்பகல் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ்.மாநகரசபை ஆணையாளர் வழங்கவுள்ளார். இப்போட்டி இம்முறை எழுத்துப் பரீட்சையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ச)

# யாழ்.மாவட்டத்தில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய திறந்த வெளியரங்கு முன்பாக பிள்ளையார் கோவில் அருகில் இடம் பெற்ற உண்ணாவிரதத்தில் நூற்றுக் கணக்கான பெண்களும் யுவதிகளும் கலந்து கொண்டனர். இங்கு கொழும்புத்துறை செட்டித் தெரு. சுவாமியார் வீதி, ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். சட்டத்தரணிகள் இளைப்பாறிய அரச அதிகாரிகள் பலர் இதில் காணப்பட்டனர். கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய நிர்வாகிகள் இவர்களுக்கான வசதிகளைச் செய்துவளனர்.

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
10-30 12-30, 2-30 4-45 7-00,
BLOODY AVENGER
யப்பானில் படை வீரர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு முன் சீன கராட்டி வீரர் 3 பேரின் மயிர் கூச்செறியும் சண்டைகள் நிறைந்தது. இதுவரை நீங்கள் பார்த்து ரசித்திருக்க முடியாத சண்டைப் படம். முதல் முறையால் திரையிடப்படுகிறது.

# வட்டு. மேற்கில் சமாதான சபை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவில் சமாதானசபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கிராமசேவை அலுவலர் திரு. க. சிறிதரன், பயிர்ச் செய்கைஉத்தியோகத்தர் திரு ஜீ. சிதம்பரநாதன் உட்பட மற்றும் பலர் சபையின் நோக்கங்கள் பற்றியும் அமைப்பு விதிகள் பற்றியும் விளக்கிக் கூறினார்கள். (வ)

# விழிப்புக் குழுவினர் நடத்திய ஊர்வலம்

(எம். ரி. சந்திரகுமார்)

வெலிக்கடைச் சிறையில் 24வது நாளாக மரணத்தறுவாயில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து மற்றொரு ஊர்வலம் நேற்று நடாத்தப்பட்டது.

மானிப்பாய் - எழுமுள்ளி, சங்குவேலி, உடுவில்-ஆலடி, விழிப்புக்குழுவினர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட இவ்மெளன ஊர்வலத்தில்1000க்கு மதிகமானோர் கலந்துகொண்டனர். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் காலை 9-30 மணிக்கு ஆரம்பமான இவ்வூர்வலம் 11 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தை சென்றடைந்தது.

ஊர்வலம் ஆரம்பமாகி மானிப்பாய் வீதியினூடாக சென்றுகொண்டிருக்கும்போது மானிப்பாய் வட்டாரப் பாடசாலை மாணவ மாணவிகள் தாமாகவே முன்வந்து சீருடைகளுடன் ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டனர் பொதுமக்களும் மாணவ மாணவிகளும் கறுப்புப் பட்டி அணிந்து சுலோகங்களை தாங்கியவண்ணம் கொடிய வெயிலையும் பொருட்படுத்தாது கவலை தோய்ந்த முகங்களுடன் அமைதியாக சென்றுகொண்டிருந்தார்கள்.

ஊர்வலம் மானிப்பாய், ஆனைக்கோட்டை, குளப்பிட்டி. கொக்குவில் நாச்சிமார்கோவிலடி, பலாலிவீதிவழியாக சென்று யாழ். பல்கலைக்கழகத்தை சென்றடைந்தது.

விழிப்புக்குழுவினர் பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கொன்றை நடாத்தினர் அங்கு தமிழின விடுதலையின் அவசியம் பற்றியும் உண்ணாவிரதிகளின் தியாகம்பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது யாழ். பல்கலைக்கழக கலாசாரக்குழுவினர் இன்றைய நாட்டுநிலைமையை விளக்கும் வில்லிசை ஒன்றையும் நடாத்தினர். (ச)

## 'தமிழன்' தியாகராஜா அமரரானார்

முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் ஒருநாட் காலை யாழ்ப்பாணப் புகையிரதநிலையம் பல்வேறு அதிகாரிகளாலும். அரசியற் பிரமுகர்களாலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. பொலிஸ் அதிகாரிகள் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தனர் பலர் வண்ணமலர் மாலைகளுடன் புகைவண்டியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றனர். பேர்போன நாதஸ்வர தவில் வித்துவான்கள் தங்கள் வாத்தியங்களை அவிழ்த்து ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர் அந்த நேரத்தில் வந்து தரித்துநின்ற புகைவண்டியில் இருந்து புன்னகைத்தபடி இறங்கிய பெரிய மனிதர் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி மாலைகளை ஏற்கவும் ''கோ-பாக் (Go Back) சேனநாயக்கா'' திரும்பிப் போ சேனநாயக்கா என்ற குரல்ஒலிகள் ஒலிக்கவும் நேரம் சரியாக இருந்தது.

பாதுகாப்புக்காக நின்ற பொலிசார் ஒலிவந்த திசைகளில் ஓடி ஆர்ப்பாட்டம் செய்த மூன்று நான்கு இளைஞர்களைக் கைது செய்து கொண்டு சென்றனர்: மறுநாட்காலை தமிழ், ஆங்கில தினசரிகளில் எல்லாம் ''யாழ் புகையிரத நிலையத்தில் ஆர்ப்பாட்டம்! ''தமிழன்', ஆசிரியருடன் வேறு மூன்று இளைஞர்களும் கைது'' என்று செய்தி முன்பக்கத்தைப் பிடித்துக் கொண்டது.

அன்று 'தமிழன்' என்ற சஞ்சிகையின் ஆசிரியனாகவும், அதன் நிர்வாகி ஆகவும் மாணவனாகவும் இருந்த சுருவில் றோ. க பாடசாலை அதிபர் சரவணையூர் திரு. வை. தியாகராஜன் இன்று அமரராகிவிட்டார்

தமிழ் வாழவும், தமிழர் வாழவும் இலைமறை காய் போல் இருந்து இயங்கிய திரு. வை. தியாகராஜன் தீவுப் பகுதித் தமிழாசிரியர் சங்கம் பல்லாண்டு காலம் தனது செயலாளராக வைத்துப் பணி கொண்டது.

தமிழகத்தில் கல்வி பயிலச் சென்று திராவிடக் கழகப்பணிகளில் திசைமாறி கல்வியைத் தொடராமல் நாடு திரும்பியதும் தன்னோடொத்த வயதினராகவும் தமிழரசுக் கட்சித் தொண்டனாகவும் உழைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் குளப்பிட்டி அருணாசலம் போன்றவர்களுடன் இணைந்து தமிழரசுக் கட்சியின் கொள்கைக்காக உழைத்தவர், திரு. தியாகராஜன் அன்றிலிருந்து தமிழர் போராட்டங்கள் அனைத்திலும் முன்னின்று உழைத்த இவரை இனி நாம் காணமுடியாது.

—தில்லைச்சிவன்

# பரிபாலனசபை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபை யொன்று அண்மையில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. பின் வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் எஸ். கைலைநாதன் உபதலைவர் எம். செல்லையா, செயலாளர் கே. ஞானச்சந்திரமூர்த்தி, உபசெயலாளர் ரி. ஸ்ரீதரன், பொருளாளர் ரி. நடராஜா: மேலும் பத்து பேர் கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ச)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## மாவிட்டபுரத்தில் லொறியைக் கலைத்து ஆயுதப்படையினர் சுட்டனர்

### சாரதியும் கிளீனரும் காயம்

(மாவிட்டபுரம்)

ஒழுங்கையால் சென்ற லொறியை கலைத்துச்சென்று ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

மாவிட்டபுரம் சந்திக்கு நீண்டநாட்களின் பின்னர் இராணுவத்தினர் மினிபஸ் ஒன்றில் வந்ததும் பரபரப்புடன் கடைகள் மூடப்பட்டன. ஆனால், வீதியில் சென்ற லொறிகளை மறித்து விசாரணை செய்தபின்னர் பிரதான வீதியில் இருந்து ஒரு லொறி வீமன்காமம் நெசவு நிலைய வீதிக்கு செல்வதை அவதானித்து அவ்விடத்துக்கு விரைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர், லொறிச் சாரதி கந்தசாமி விஜயானந்தன் மற்றும் கிளீனரும் காயமடைந்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றிச் செல்லப்பட்ட லொறி காங்கேசன்துறை முகாமில் வைக்கப்பட்டுள்ளது.

## இன்று கீரிமலையில் உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

சிறைச்சாலைகளில் வாடும் இளைஞர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக கீரிமலையில் இன்று செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தப்படவிருக்கிறது. கீரிமலை பிரஜைகள் குழுவினரும் பொதுமக்களும் இணைந்து நடத்தும் உண்ணாவிரதம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடையும்.

## நாளையும் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

டாக்டர் பாலசிங்கத்தின் நாடு கடத்தல் உத்தரவை வாபஸ் பெறக்கோரியும் போராளிகளை நாடுகடத்த வேண்டாம் என்றும் இந்திய மத்திய அரசைக்கோரி யாழ் குடாநாட்டில் பரவலாக நாளை புதன்கிழமை ஆர்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளைகாலை 7 மணிக்குகுறிப்பிடப்பட்டுள்ள முக்கிய சந்திகளில் இருந்து ஊர்வலங்கள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ். நகரில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியும் (இடது அதன் சார்பு ஸ்தாபனங்களின் ஆதரவில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

திரு கே. ஏ சுப்பிரமணியம், திரு. கே. செந்திவேல், திரு எஸ். தேவராசா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

''தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விசாரணை செய் அல்லது விடுதலை செய்'' என்ற பெரிய சுலோக அட்டையைத் தொடர்ந்து பல சுலோக அட்டைகளுடன் இந்த ஊர்வலத்தில் பங்குபற்றினார்கள் ஊர்வலத்தில் செங்கொடிகளும், சிகப்பு நிற சுலோகங்களுடன் பெருமளவில் காணப்பட்டன.

யாழ். பல்கலைக் கழகத்தில், திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில், உண்ணாவிரதத்தை ஆதரித்து கூட்டம் நடைபெற்றது. (க)

## பாடசாலையில் தஞ்சம்

(மன்னார்)

மதவாச்சி மன்னார் வீதியில் ஏற்பட்ட அசம்பாவிதத்தைத் தொடர்ந்து ஏராளமான தமிழ் குடும்பங்கள் சென் சேவியர் பாடசாலையில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். (மா-க)

## வடக்கு, கிழக்கில் உண்ணாவிரத முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டிருக்கும் சாகும்வரை உண்ணாவிரதம் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளட்) வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த விருப்பதாக அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை முதற் கட்டமாக வடக்குப் பிரதேசத்தில் 2 மணி நேர சிவில் நிர்வாக ஸ்தம்பித போராட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே, இப்போராட்டம் நடத்தவிருப்பதாக 'புளட்' தெரிவித்துள்ளது. (மா)

## மரணப்பிடியில் 26 வது நாள்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் வெளியிடப்பட்டுவரும் 'ஈழம் செய்திப்பலகை' சுவரொட்டியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிணைக் கோலத்தில் போராளிகள் 26வது நாள்!

நேற்று யாழ் குடாநாடுபூராவும் மக்கள் பேரெழுச்சி நீண்ட ஊர்வலங்கள் அரசியல் கைதிகளின் உண்மை நிலையை உலகுக்கு காட்டினர்; ஜனநாயக சக்திகள் அரசுக்குத் தந்தி ஓ! போராளிகளே எங்கள் மக்கள் உயிரோடு உள்ளார்கள். எங்கள் மக்கள் உணர்வோடு உள்ளார்கள். (மா)

## "காட்டு மரங்களை வெட்டவோ, கடத்தவோ அனுமதிக்க முடியாது"

### 'புளொட்' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மரங்கள் களவாக வெட்டப்பட்டு, யாழ். மாவட்டத்திற்கு கடத்தப்படுவது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பட்சத்தில், எம்மால் இம்மாதிரியான மரம்வெட்டுபவர்கள், கடத்துபவர்களுக்கு எதிராக, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''எம் மண்ணில் இன்று இனப்பிரச்னையும் பொருளாதாரப் பிரச்னையும் தலைதூக்கியுள்ள இவ்வேளையில் நாம் இயற்கை வளங்களை அழிப்பதும், காடுகளில் மரங்கள் வெட்டுவதென்பதும் தவிர்க்க வேண்டியவைகளாகும். காட்டு மரங்கள் களவாக வெட்டப்படுவதும், அவை யாழ் மாவட்டத்திற்கு கடத்தப்படுவதும் இன்று சர்வசாதாரணமாகி விட்டது. இதன் பாதிப்புகள் எமக்கு தற்போது தெரியாவிட்டாலும், வருங்காலத்திலும் இம்மாதிரி மரங்கள் வெட்டப்படுமானால் நாம் எம் மண்ணை பாலைவனமாக்கிவிடுவோம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை

முன்பு வனமரங்கள் வெட்டுவதற்கான இலாக்காவினால் குறிப்பிட்ட காடுகளிலிருந்து குறிக்கப்பட்ட தொகை மரங்களை வெட்டுவதற்கே அனுமதிக்கப்பட்டிருந்தது தற்போது இத்தொழிலானது எவ்வித கட்டுப்பாடுகள் அற்றதாயும், அதிக லாபம் கருதியுமே நடாத்தப்படுகின்றன. ஆதலால் தொடர்ந்தும் எம் மண்ணில் இருக்கும் காட்டு மரங்களை வெட்டவோ, கடத்தவோ அனுமதிக்கமுடியாது எனவும் மர வியாபாரிகள் இது சம்பந்தமாக எமக்குப் பூரண ஆதரவு அளிக்கவேண்டுமெனவும் நாம்கேட்கின்றோம். (மா)

## ஜனாதிபதி தூதுவர்களுக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் அணுகித் தீர்வுகாணுமாறும் நீதகோரி அஹிம்சைமுறையில் மேற்கொள்ளும் அவர்களது போராட்டத்தை மதிக்குமாறும் கேட்டுக்கொள்வதுடன், விலைமதிக்கமுடியாத உயிர்ப்பலியைத் தடுத்துநிறுத்துமாறும் வலியுறுத்துகிறோம்''

மேற்படி வாசகங்கள் பொறிக்கப்பட்ட தந்திகளை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு யாழ் பல்கலைக் கழக ஆசிரிய சங்கம் நேற்று அனுப்பிவைத்தது.

அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கும் தந்திகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (நா)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இன்று கச்சேரி பஸ் நிலையத்தில் 4நாள் தொடர்ச்சியான உண்ணாவிரதமொன்றை மேற்கொள்ள பொதுமக்கள் முன்வந்துள்ளனர். உண்ணாவிரதத்திற்கு ஆதரவு அளிக்க விரும்புபவர்கள் காலை மணி முதல் மாலை 5 மணிவரை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொள்ளலாமெனவும் அவர்கள் கேட்டுள்ளார்கள். (ச)

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஸ்ரீஞானவைரவர் ஆலய முன்றலில் இன்று உண்ணாவிரதம் நடைபெறும். உண்ணாவிரத முடிவில் உருத்திரமிகும் நடைபெறும். (க)

## மரண அறிவித்தல்



### திரு. ஸ்ரீதரன் செல்வநாயகம்

DISTRICT SALES OFFICER,
(COLOMBO PAINTS LTD and COLLETTES DISTRIBUTORS LTD)

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீதரன் செல்வநாயகம் 2-9-85 அன்று காலமானார். இவர் காலம் சென்ற செல்வநாயகம் (R M P., திருமதி செல்வநாயகம் சிவகாமசுந்தரியின் அன்பு மகனும், மாலினியின் அன்புக் கணவரும், அபிராமி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), நர்மதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோதேவன், ஆனந்தகடாட்சினியின் அன்புச் சகோதரனும் காலம் சென்ற திரு நா. குமாரசுவாமி (ஓட்டோஸ், J C S LTD), திருமதி குமாரசுவாமியின் அன்பு மருமகனும், இந்திரா, மனோகரன், இரஞ்சினி, பாலேந்திரா, இரஞ்சன், சாந்தினி, மனோரஞ்சன், துளசி - ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரின் மைத்துனருமாவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (03- 09- 85) இன்று பி. ப. 3 மணிக்கு கொடிகாமத்தில் நடைபெறும்

''மகேச வாசம்''
கொடிகாமம்.

524

## மரண அறிவித்தல்

### கந்தவனம் நாகலிங்கம்



தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆரம்ப பாடசாலை முன்னைநாள் அதிபர் திரு கந்தவனம் நாகலிங்கம் அவர்கள் காலமானார். இவர்காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற திருமதி சி. ஞானேஸ்வரி, திரு பத்மநாதன் உடற்பயிற்சி விரிவுரையாளர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை பலாலி திருமதி கு. நேசம்மா, திரு கதிர்காம நாதன் சவுதி, திரு சிதம்பரநாதன் (உரிமையாளர் தாசன் ஸ்ருடியோ தெல்லிப்பழை), திருமதி தி நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ச சிவசாமி (இணுவில்), திரு. கு குகதாசன் (உரிமையாளர் கொழும்புஸ்ருடியோ) திரு. ம. சபாரத்தினம், திரு. தி. தெய்வேந்திரன் (மேற்கு ஜேர்மனி), திருமதிகள் ப. மரகதவல்லி (ஆசிரியை வல்வெட்டி), க. யோகமலர், சி. சந்திரலீலா ஆகியோரின் அன்புமாமனருமாவார். ஈமக்கிரியைகள் 11-9-1985 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியை குரும்பசிட்டி பொதுமயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

527 தகவல்: சு. சோதிலிங்கம்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under namber B 10036/81 Eelananu P O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126